**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருN.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை</u>

**<u>ஐ.ஏ.எண்.02/2022 இன் அ.வ.எண்.174/2022</u>**

பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி அஞ்சல், ஸ்ரீராம் தியேட்டர் பின்புரம், ஸ்ரீராமகிருஷ்ணா நகர், க.எண்.39 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.சுந்தரராஜன் மனைவி சுமார் 58 வயதுடைய திருமதி. பத்மாவதி.

… மனுதாரர் / வாதி

/ எதிர் /

உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை, பழனிரோடு, கதவு எண்.95 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.தங்கவேல் மகன் சுமார் 46 வயதுடைய திரு.ஜெகதீஸ். … எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

மனு பி அட்டவணை சொத்தில் கண்ட வண்டித்தடத்தின் வழியாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு ஏ அட்டவணை சொத்துக்களை அடைந்து அமைதியாக அனுபவிக்கும் மனுதாரரின் வசதி உரிமையில் எதிர்மனுதாரரோ, அவரது உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யகூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 18.04.2022

இம்மனுவானது கடந்த 26.08.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.தங்கரத்தினம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட…

## இறுதி உத்தரவு

1. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனு பி அட்டவணை சொத்தில் கண்ட அமைப்பால் உள்ளவாறான வண்டித்தடத்தின் வழியாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு ஏ அட்டவணை சொத்துக்களை அடைந்து அமைதியாக அனுபவிக்கும் மனுதாரரின் வசதி உரிமையில் எதிர்மனுதாரரோ, அவரது உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யகூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

## செலவுத்தொகை பட்டியல்

| மனுதாரர் தரப்பில் | எதிர்மனுதாரர் தரப்பில் |
|---|---|

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்துவிபரம்

**ஏ ஷெட்யூல்**

1) கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை சார்பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது கிராமம் புலத்தில் பட்டா 714 க்கு கட்டுப்பட்ட க.ச.292/3A காலை பு.ஹெக் 1.13.0 க்கு பு.ஏ.2.80 செண்ட் இதில், க.ச.292/2B பாலச்சந்திரன் பூமிக்கும் ஓடைப்புறம்போக்குக்கும் தெற்கு, க.ச.292/3B நெ. காலை தங்கவேல் செட்டியார் பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் பு.ஹெக்.0.68.5 க்கு பு.ஏ.1.69 1/4

பின்னும் பெரியபோது கிராமம் புலத்தில் பட்டா எண் 714 க்கு கட்டுப்பட்ட க.ச.292/3A நெ காலை க.ச.292/2B நெ காலை பு.ஹெக் 0.26.0 க்கு பு.ஏ. 0.64 செண்ட் இதில் பு.ஏ 0.02 செண்ட் உள்ள கிணற்றிடத்தில் பொதுவில் சரிபாதி

பு.ஏ.0.01 செண்ட்க்கு புஹெக் 0.00.4 ஏர்ஸ்.

பின்னும் பெரியபோது கிராமம் புலத்தில் பட்டா எண் 714 க்கு கட்டப்பட்ட க.ச.292/3A நெ. காலை பு.ஹெக் 1.13.0 க்கு பு.ஏ.2.80 செண்ட் இதில் பொதுக்கிணறு, கிணற்றிடம், தடம் ஆகியவற்றுக்காக விடப்பட்டுள்ள 0.04 செண்ட் இதில் பொதுவில் சரிபாதி 0.02 செக்கு பு.ஹெக் 0.00.8 ஏர்ஸ்.

ஆக ஒட்டு பு.ஏ.1.72 1/4 க்கு பு.ஹெக்.0.69.73 ஏர்ஸ், இந்த ஒரு ஏக்கர் எழுபத்தி இரண்டு செண்ட் விஸ்தீரணமுள்ள புஞ்சைபூமியும் ஷை க.ச.292/2B காலையிலுள்ள கிணற்றிலும், ஷை கிணற்றில் வைக்கப்பட்டுள்ள 5 எச்.பி மின்மோட்டார் பம்பு செட்டிலும் (மினிணைப்பு எண் 272 பொதுவில் சரிபாதி பாத்தியங்களும், ஷை பூமிக்கு மாமூலாக உள்ள பி.ஏ.பி வாய்க்கால், மடை, அரணி பாசன் பாத்தியங்களும், முன்பத்திரப்படியும், மாமூல்படியும் உண்டாக வழிநடை, தட பாத்தியங்களும் வண்டி வாகனங்கள், கனரக வாகனங்கள் போய்வந்து கொள்ளும் பாத்தியங்களும் வகையறா சகிதம்.

<u>பி ஷெட்யூல்</u>

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை சார்பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது கிராமம் புலத்தில் முன்பு கிழமேல் இட்டேரியாக இருந்து தற்போது கிழமேல் ரோடாக உள்ள க.ச.295 இருந்து க.ச.292/3B நெ காலையின் மேல் கோட்டில் தென்வடலாக க.ச.292/3A நெ. காலைவரையில் செல்லும் 12 அடி அகல வண்டித்தடத்தில் வாதியின் ஆட்கள், வண்டி வாகனங்கள் சென்று கொள்ளும் தட பாத்தியம்.

இவ்வுத்தரவு 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.